இல்லாத இடங்களில் நஞ்சை நிலத்தை எடுத்து வீட்டு மனை கொடுக்கிறோம். அப்படி கொடுக்கும்போது அவர்கள் 2, 3 ஆண்டுகள் வீடு கட்டாமலேயே விட்டுவிடுகிறார்கள். வீடு கட்டாமல் அப்படியே போட்டுவிட்டு சிறிது காலத்திற்குப் பிறகு அதை இன்னொருவருக்கு விற்றுவிடுகிறார்கள். அதனால் இப்படிப்பட்ட சம்பவங்கள் அரசினுடைய கவனத்திற்கு வந்தால், யாருக்குப் பட்டா கொடுக்கப் பட்டதோ, அவர் யாருக்கு விற்றாரோ அந்த இருவருக்கும் சேர்த்து ஏதாவது சிறிய தண்டனையேனும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவசமாகக் கொடுக்கிற வீட்டுமனைப் பட்டாவானாலும் சரி, நிலப்பட்டாவானாலும் சரி, அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றது. எனவே அதை விற்றால் செல்லாது. அதை விற்றவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டாலும், அதை யார் வாங்கிக் கொண்டார்களோ அவர்கள் அதை அனுபவிக்க முடியாது. அது அரசினுடைய கவனத்திற்கு வந்தால் அதை நாம் கேன்சல் செய்து விடுகிறோம். அதனை ரத்து செய்துகொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 44, திரு. எஸ். ஆசைமணி, இருக்கையில் இல்லை.

வினா எண் 45, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், உறுப்பினர் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எச் எம். ராஜு கேட்கிறார்.

45—

பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை முழுநேரம் இயக்க நடவடிக்கை.

*11310—திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவ மனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு 24 மணி நேரமும் இயங்கக்கூடியவாறு ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

(அ) மற்றும் (ஆ): பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவ மனையில் தற்போது அவசர சிகிச்சைப் பிரிவு 24 மணி நேரமும் இயங்கி வருகின்றது. அப்பிரிவில் ஷிப்ட்டிற்கு ஒரு மருத்துவர் வீதம் பணியாற்றி வருகிறார்கள்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொன்ன பதிலுக்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அங்கே அநேக குடியிருப்புகள் இருக்கின்றன. அரசு அலுவலர்கள் அங்கே இருந்து அனேகம்பேர் கோட்டைக்கு வருபவர்களாகவும் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அங்கே இந்த சிகிச்சைப் பிரிவுகள் நல்ல வகையில் செயல்படவில்லை என்பது குறித்துத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் இந்த வினாவைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது முக்கியமான பகுதியாக இருப்பதனால் பெரியார் நகரில் அரசு புறநகர் மருத்துவமனை எப்போதும் நல்ல வகையிலே சிறப்பாகச் செயல்பட பல்வேறு சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது 28 லட்சம் ரூபாய் செலவில் அங்கே கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அதற்கான கருவிகள் வாங்குவதற்கும் இப்போது ஆர்டர் போடப்பட்டிருக்கிறது. எனவே இவைகளை எல்லாம் செய்து முடிக்கிறபோது இன்னும் சிறப்பாக அது இயங்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே அங்கே இருக்கிற வசதிகளை வைத்துக்கொண்டு முடிந்த அளவுக்கு அங்கே இருக்கிற மருத்துவர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். எனவே அந்த வசதிகளையும் ஏற்படுத்தி விட்டால் இன்னும் கொஞ்சம் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1993 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 46, திரு. கே. பி. ராஜு, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

46—

தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்குப் பெறும் தொகை.

*15225—திரு. கே. பி. ராஜு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்குப் பெறும் தொகை அதிகமாக உள்ளதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

(அ) தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு வசூலிக் கப்படும் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு கொள்கை அளவில் இன்னும் முடிவெடுக்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளி களிடம் அளவுக்கு அதிகமான தொகையை வசூல் செய்கிறார்கள். மக்களிடமும் ஒரு எண்ணம் அப்படி இருக்கிறது. கட்டடங்கள் நன்றாக இருந்தால் அங்கே மருத்துவ சிகிச்சையும் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் பரவலாக இருக்கிற காரணத்தால் அரசு மருத்துவமனைகளில் நல்ல சிகிச்சை இருந்தும், நல்ல கருவிகள் இருந்தும், நல்ல டாக்டர்கள் இருந்தும், அங்கே போகாமல் தனியார் மருத்துவமனைக்குப் போவதை ஒரு ஃபேஷன் ஆகக்கூட இப்போது மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஏதாவது ஒரு வழியில் அதாவது அதிகமான தொகை வசூலிக்காமல் குறிப்பிட்ட வியாதிக்கு குறிப்பிட்ட தொகை என்ற கணக்கில் வசூலிப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்து அந்தத் தனியார் துறை மருத்துவர்களுக்கு ஆணை பிறப்பிக்குமா அல்லது ஆலோசனை கூறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.